Free Digitial Copy From ServeNow

# ஆவிக்குரிய யுத்தம் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அடிப்படை விஷயங்கள்

மோசஸ் செமண்டா முபுகா

Free Digitial Copy From ServeNow

*ஆவிக்குரிய யுத்தம் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அடிப்படை விஷயங்கள்*

***The Basic Things You Need to Know About Spiritual Warfare (Tamil)***

***By Moses Ssemanda Mbuga***

***Editor: Lars B. Dunberg***

Copyright © 2018 by *ServeNow*.
Used by permission.
All rights reserved.

ISBN: 978-1-955756-22-8

All Bible Verses are taken from the Holy Bible (Tamil TAOVBSI) Copyright by Bible Society of India. Used by Permission. All Rights. Reserved.

Published by *ServeNow*,
7222 Commerce Center Drive, Suite 220
Colorado Springs, CO 80919, USA.

# <u>ஆவிக்குரிய யுத்தம் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அடிப்படை விஷயங்கள்</u>

Free Digital Copy From ServeNow

## அறிமுகம்

### *ஆவிக்குரிய யுத்தம் என்றால் என்ன?*

ஆவிக்குரிய யுத்தம் என்பது நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான பிரபஞ்சப் போர் ஆகும். அதன் யுத்தங்கள் தினமும் தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையில், கிறிஸ்தவ திருச்சபைக்கும் நமது ஆவிக்குரிய எதிரியால் ஆளப்படும் உலக அமைப்புக்கும் இடையில் நடக்கின்றன. தேவனுடைய ஒவ்வொரு பிள்ளைகளுக்குள்ளும், பரிசுத்த ஆவிக்கும் மாம்சத்தின் இச்சைகளுக்கும் இடையில், நன்மைக்கும் தீமைக்கும் இடையில், சரிக்கும் தவறுக்கும் இடையில், ஒளிக்கும் இருளுக்கும் இடையில் யுத்தம் நடக்கிறது. இது அகில உலகில் ஜீவனையும் ஒழுங்கையும் பாதுகாக்க முயலும் நேர்மறை சக்திகளுக்கும், ஜீவனையும் ஒழுங்கையும் சீர்குலைத்து அழிக்க முயலும் எதிர்மறை சக்திகளுக்கும் இடையிலான போராட்டமாகும். மனிதர்களால் அல்லாமல் தேவனால் வரையறுக்கப்பட்டவைகளான நன்மை மற்றும் தீமைக்கான தெளிவான அர்த்தங்கள் வேதாகமத்திலும் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

நீங்கள் இந்த இருண்ட உலகில் உப்பும் வெளிச்சமுமாக இருந்து, வாழும் ஒரு விசுவாசியாக இருந்தால், ஆவிக்குரிய யுத்தத்தை எதிர்கொள்ளாமல் உங்களால் நீண்ட காலம் இருக்க முடியாது. தடைகளும் தாக்குதல்களும் உங்கள் திசையில் வேகமாக வரும். சாத்தானின் தந்திரங்களுக்கு எச்சரிக்கையாக இருக்கவும், இந்த உலகில் விழிப்புடன் வாழவும், தேவனுடன் நெருக்கமாக இருக்கவும் தமது வார்த்தையில் அவர் நமக்கு நினைவூட்டுகிறார்.

ஆவிக்குரிய யுத்தத்தைக் கற்பிப்பதன் நோக்கம், ஆவிக்குரிய உலகத்திலோ அல்லது மனித உலகத்திலோ யுத்தத்தை ஊக்குவிப்பதோ அல்லது மகிமைப்படுத்துவதோ அல்ல. இருப்பினும், சத்துரு முன்னேறி வருவதைக் கண்டு எச்சரிக்கை விடுப்பதன் மூலமும், அந்த எதிரியை வெல்ல வீரர்களுக்கு பயிற்சி அளிப்பதன் மூலமும், அப்பாவி ஜனங்களைக் கெடுப்பதிலிருந்தும் அழிவிலிருந்தும் பாதுகாப்பதன் மூலமும் நடந்து கொண்டிருக்கும் யுத்தத்தின் கொடூரங்களைக் குறைப்பதே இதன் நோக்கமாகும்.

யார் தேவனுடைய எதிரி மற்றும் யார் தேவனுடைய நண்பர் என்பதை வேதாகமம் தெளிவாக அடையாளம் காட்டுகிறது. இயேசு

Free Digitial Copy From ServeNow

## ஆவிக்குரிய யுத்தம் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அடிப்படை விஷயங்கள்

கிறிஸ்து தமது சீஷர்களுக்கு அவர்களது எதிரிகளாய் இருக்கிற மனிதர்களை எப்படி நேசிக்க வேண்டும் என்றும், அதே நேரத்தில் பிசாசின் செயல்களை எதிர்க்கவும் கற்றுக்கொடுத்தார். அன்பு உங்களது அண்டைவீட்டு நண்பர்களுக்கு எந்தத் தீங்கும் செய்யாது. அதே நேரத்தில் சாத்தான் உன்னதமான தேவனுக்கு சமமானவன் அல்ல என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது.

### ஆவிக்குரிய யுத்தத்தைப் பற்றி வேதாகமம் என்ன சொல்கிறது?

• *ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்.* (யாக்கோபு 4:7 TAOVBSI)

• *பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள்; ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்.* (1 யோவான் 4:4 TAOVBSI)

• *நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும், மாம்சத்தின்படி போர்செய்கிறவர்களல்ல. எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்.* (2 கொரிந்தியர் 10:3-5 TAOVBSI)

• *தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்; உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே.* (1 பேதுரு 5:8-9 TAOVBSI)

## ஆவிக்குரிய யுத்தம் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அடிப்படை விஷயங்கள்

Free Digital Copy From ServeNow

• இமைப்பொழுது உன்னைக் கைவிட்டேன்; ஆனாலும் உருக்கமான இரக்கங்களால் உன்னைச் சேர்த்துக்கொள்வேன். (ஏசாயா 54:17 TAOVBSI)

• *இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே.* (ரோமர் 8:37 TAOVBSI)

• *நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.* (1 கொரிந்தியர் 15:57 TAOVBSI)

• *திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்.* (யோவான் 10:10 TAOVBSI)

• *பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அல்லாமலும், உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.* (மத்தேயு 18:18-19 TAOVBSI)

• *நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு.* (ரோமர் 12:21 TAOVBSI)

• *விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்தியஜீவனைப் பற்றிக்கொள்; அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்; அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கைபண்ணினவனுமாயிருக்கிறாய்.* (1 தீமோத்தேயு 6:12 TAOVBSI)

Free Digitial Copy From ServeNow

## ஆவிக்குரிய யுத்தம் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அடிப்படை விஷயங்கள்

• *பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான், பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்.* (1 யோவான் 3:8 TAOVBSI)

• *உங்களில் ஒருவன் ஆயிரம்பேரைத் துரத்துவான்; உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சொன்னபடி, அவர் தாமே உங்களுக்காக யுத்தம்பண்ணுகிறார்.* (யோசுவா 23:10 TAOVBSI)

• *அவர்களுக்குப் பயப்படீர்களாக; உங்கள் தேவனாகிய கர்த்தர் தாமே உங்களுக்காக யுத்தம் பண்ணுவார் என்று சொன்னேன்.* (உபாகமம் 3:22 TAOVBSI)

• *உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான். நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன். அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும், பாழாக்கும் கொள்ளைநோய்க்கும் தப்புவிப்பார். அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்; அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய்; அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாகும்.* (சங்கீதம் 91:1-4 TAOVBSI)

• *சகல யூதா கோத்திரத்தாரே, எருசலேமின் குடிகளே, ராஜாவாகிய யோசபாத்தே, கேளுங்கள்; நீங்கள் அந்த ஏராளமான கூட்டத்திற்குப் பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள் என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்லுகிறார்; இந்த யுத்தம் உங்களுடையதல்ல, தேவனுடையது.* (2 நாளாகமம் 20:15 TAOVBSI)

### தேவனுடைய சர்வாயுதவர்க்கம்

இன்று உலகில், ஒருவருக்கொருவர் சரீரப்பிரகாரமான சண்டையிடும் யுத்தங்களின் படைகள் மட்டுமல்லாமல், இன்னும் அதிகமான யுத்தங்கள் உள்ளன. உலகம் முழுவதும் உள்ள விசுவாசிகளுக்கு நடப்பது ஆவிக்குரிய யுத்தங்களைக் குறிக்கிறது. விசுவாசிகள் சரியான ஆயுதங்களுடன் அந்த யுத்தங்களில் போராடத் தயாராக இருக்க வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் கூறினார், *கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு,*

# **ஆவிக்குரிய யுத்தம் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அடிப்படை விஷயங்கள்**

Free Digitial Copy From ServeNow

*இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம்.* (2 கொரிந்தியர் 10:4)

பிசாசுக்கு எதிரான நமது போராட்டத்தை வேதாகமம் ஒரு யுத்தம் என்று விவரிக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்தவர்களை தங்கள் தனிப்பட்ட பாவத்திற்கு எதிராகப் போரிட அறிவுறுத்துகிறார், மேலும் பிசாசின் சூழ்ச்சிகளை எதிர்க்க நமக்கு சவால் விடுகிறார்.

எபேசியர் 6:10-12 கூறுகிறது, *கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.*

இந்த வசனம் சில முக்கியமான சத்தியங்களைக் கற்பிக்கிறது: கர்த்தருடைய வல்லமையால் மட்டுமே நாம் உறுதியாக நிற்க முடியும். நம்மைப் பாதுகாப்பது தேவனுடைய கவசம்தான், மேலும் நமது யுத்தம் இறுதியில் உலகில் ஆவி மண்டலத்தில் உள்ள பொல்லாத வல்லமைகளுக்கு எதிரானது.

எபேசியர் 6:13-17, தேவன் நமக்குக் கொடுக்கும் ஆவிக்குரிய சர்வாயுதவர்க்கத்தின் விளக்கமாகும். ஆவிக்குரிய யுத்தம் என்ற வார்த்தைக்கு அடிப்படையாக இந்த ஆவிக்குரிய சர்வாயுத கருவிகள் எதைக் குறிக்கின்றன? நாம் சத்தியத்தை அறிந்து, சத்தியத்தை விசுவாசிக்க வேண்டும், சத்தியத்தைப் பேச வேண்டும். நமக்காக கிறிஸ்து பலியானதால் நாம் நீதிமான்களாக அறிவிக்கப்படுகிறோம் என்பதில் நாம் இளைப்பாற வேண்டும். நாம் எவ்வளவு எதிர்ப்பை எதிர்கொண்டாலும் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும். நாம் எவ்வளவு கடுமையாகத் தாக்கப்பட்டாலும் தேவனுடைய வாக்குத்தத்தங்களை விசுவாசித்து, நம் விசுவாசத்தில் தடுமாறாமல் இருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலான நமது பாதுகாப்பு, நமது இரட்சிப்பின் நிச்சயத்தில் உண்டு, அதை எந்த

Free Digitial Copy From ServeNow

## ஆவிக்குரிய யுத்தம் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அடிப்படை விஷயங்கள்

ஆவி மண்டல சக்தியாலும் நம்மிடமிருந்து பறிக்க முடியாது என்ற நிச்சயமே அது.

நமது பாதுகாப்பு ஆயுதம் நமது சொந்தக் கருத்துகளோ அல்லது உணர்வுகளோ அல்ல, தேவனுடைய வார்த்தையே நமது பாதுகாப்பு. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் நிறைந்து அவரது சித்தத்தின்படி நாம் ஜெபிக்க வேண்டும்.

நாம் முழுமையாக ஆயுதத்தை அணிந்திருக்கும்போது, அனைத்து ஆவிக்குரிய யுத்தங்களிலும் வெற்றி பெற முடியும். ஒரு விசுவாசி தொடர்ந்து தேவனுடைய முழு சர்வாயுதத்தையும் அணிந்திருக்க வேண்டும். தேவனுக்கு சகல வல்லமையும் உண்டு, சகலமும் அவருடைய கட்டுப்பாட்டில் உள்ளன, நாம் அவரால் வெற்றி பெற்றவர்கள். சாத்தானுக்கு நம் மீது எந்த அதிகாரமும் இல்லை. கொலோசெயர் 2:15 தெளிவாகக் கூறுகிறது, *துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார்.*

எபேசியர் 1:21-23 இதை இவ்வாறு வெளிப்படுத்துகிறது: *அவரை உன்னதங்களில் தம்முடைய வலதுபாரிசத்தில் உட்காரும்படி செய்து, எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்.*

யுத்தத்தில் வெற்றி பெறுதல் என்பது பொருத்தமான கவசம் மற்றும் பொருத்தமான ஆயுதங்களை அணிந்திருப்பதைப் பொருத்தே அமையும். மேலும் ஒரு ஆவிக்குரிய யுத்தத்துக்கு நம்பத்தக்க ஆவிக்குரிய ஆயுதங்கள் தேவை. உலகப் பிரகாரமான ஆயுதங்களால் ஆவிக்குரிய யுத்தத்துக்கு எந்தப் பயனும் இல்லை. உங்கள் சொந்த பலத்தால் பிசாசின் தாக்குதல்களைத் தவிர்ப்பதும் அவனுடைய தந்திர உபாயங்களை ஜெயிப்பதும் சாத்தியமற்றது. தேவனுடைய வார்த்தை அறிவுறுத்துகிறது, *நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்.* (எபேசியர் 6:11 TAOVBSI)

Free Digitial Copy From ServeNow

அப்போஸ்தலனாகிய பவுலும் இதைத்தான் போதித்தார், *நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும், மாம்சத்தின்படி போர்செய்கிறவர்களல்ல. எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது.* (2 கொரிந்தியர் 10:3-4 TAOVBSI)

.

இது வரவிருக்கும் ஆவிக்குரிய யுத்தங்களில் வெற்றிக்கும் தோல்விக்கும் இடையிலான வித்தியாசத்தைக் குறிக்கத்தக்க வாழ்க்கையை மாற்றும் வாக்குத்தத்தமாகும்.

இப்போது, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைப் பற்றிய முழுமையான விவரத்தை நாம் பார்ப்போம்.

*ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்; சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்; பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள். இரட்சணியமென்னும் தலைச்சீராவையும். தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.* (எபேசியர் 6:13-17 TAOVBSI)

## ***சத்தியம் எனும் கச்சை***

நம்முடைய அடித்தளம் தேவனுடைய வார்த்தையாகிய சத்தியம். அவருடைய வார்த்தை சத்தியம் மட்டுமல்ல, அவர் தாமே சத்தியமாக இருக்கிறார். *நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்...* (யோவான் 14:6 TAOVBSI) என்று இயேசு கூறினார்.

## <u>ஆவிக்குரிய யுத்தம் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அடிப்படை விஷயங்கள்</u>

Free Digitial Copy From ServeNow

இயேசு தாமே ஜீவனாக இருப்பது போல, சாத்தானும் ஆவிக்குரிய மரணத்தைச் சுமப்பவனாய் இருக்கிறான். *நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷகொலைபாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்.* (யோவான் 8:44 TAOVBSI)

பொய் சொல்வதை விட்டுவிட்டு, நம் அயலாரிடம் உண்மையைப் பேசும்படி அப்போஸ்தலனாகிய பவுல் நமக்கு அறிவுறுத்துகிறார். *அன்றியும், நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறபடியால், பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன்.* (எபேசியர் 4:25 TAOVBSI)

நாம் பொய் சொன்னால், சாத்தானின் சொந்தக் கருவிகளைப் பயன்படுத்துகிறோம், அப்படிச் செய்தால், நிச்சயமாக அவனை ஜெயிக்க முடியாது. இயேசுவே சத்தியம். *எங்களால் தேவனுக்கு மகிமையுண்டாகும்படி, தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே.* (2 கொரிந்தியர் 1:20 TAOVBSI) நாம் ஒருபோதும் சத்தியத்திற்கு பயந்து வாழ வேண்டியதில்லை, மேலும் சத்தியம் நம்மை ஏதாவது ஒரு வகையில் தோல்வியடையச் செய்யும் என்று நாம் ஒருபோதும் பயப்பட வேண்டியதில்லை. அவருடைய வாக்குத்தத்தங்கள் "ஆம்" என்றும், அவருக்குள் "ஆமென்" என்றும் உள்ளன.

*தாம் வாக்குத்தத்தம் பண்ணினபடியெல்லாம் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு இளைப்பாறுதலை அருளின கர்த்தருக்கு ஸ்தோத்திரம், அவர் தம்முடைய தாசனாகிய மோசேயைக்கொண்டு சொன்ன அவருடைய நல்வார்த்தைகளில் எல்லாம் ஒரு வார்த்தையானாலும் தவறிப்போகவில்லை.* (1 இராஜாக்கள் 8:56 TAOVBSI)

தேவன் வாக்களித்ததை அவர் நிறைவேற்றுவார் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடன் நாம் அவருடைய எந்த வாக்குத்தத்தத்திலும் நிலைத்திருக்க முடியும்.

## ஆவிக்குரிய யுத்தம் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அடிப்படை விஷயங்கள்

Free Digitial Copy From ServeNow

சத்தியத்திலும் எனும் கச்சையைப் பயன்படுத்த நாம் முதலில் சத்தியத்தை அறிந்திருக்க வேண்டும். இயேசுவை சத்தியமாக அறிந்திருப்பது மட்டுமல்லாமல், தேவனுடைய வார்த்தை முழுவதுமே சத்தியம் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். *அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்* (யோவான் 14:6 TAOVBSI) என்றார்.

தேவன் என்ன சொல்லியிருக்கிறார் என்பது நமக்குத் தெரியாவிட்டால், அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்பதில் நாம் உறுதியாக இருக்க முடியாது. எனவே, சத்தியமாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய தனிப்பட்ட அறிவு, மற்றும் தேவனுடைய எழுதப்பட்ட சத்தியத்தைப் பற்றிய அறிவு ஆகிய இரண்டுமே ஆவிக்குரிய யுத்தத்தில் இன்றியமையாதவை. தேவனை நாம் சந்தேகிக்கவும், வஞ்சகத்தில் விழவும் செய்யும்படியும், அதன் மூலம் நம் ஆவிக்குரிய யுத்தங்களில் நாம் வெற்றி பெறுவதைத் தடுக்கும்படிக்கும், சாத்தான் இந்த சத்தியத்தைத் திரித்துவிடுகிறான்.

### *நீதியின் மார்க்கவசம்*

நீதியை ஒரு மார்புக் கவசமாக ஒப்பிடுவது, எல்லா அநீதியிலிருந்தும் இருதயத்தைக் காத்துக்கொள்வதைப் பற்றிப் பேசுகிறது. நீதிமொழிகள் 4:23-ல் கூறப்பட்டுள்ளபடி, இருதயம் நம் வாழ்வில் மிக முக்கியமானது என்று வேதாகமம் சுட்டிக்காட்டுகிறது, *எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்.*

உங்கள் இதயத்தில் எது நிறைந்திருக்கிறதோ அதுவே, இறுதியில் உங்கள் வாழ்வின் போக்கை, நன்மைக்காகவோ அல்லது தீமைக்காகவோ அமைவதைத் தீர்மானிக்கும். நம் இதயங்களை எல்லா வகையான தீமைகளிலிருந்தும் பாதுகாப்பது அவசியம். பவுல் பேசும் நீதி, விசுவாசத்தின் அடிப்படையில் தேவனிடமிருந்து வரும் ஒன்றாகும். நாம் வெறுமனே நமது சொந்த நீதியாக இருக்கும் ஒரு மார்க்கவசத்தை அணிந்திருக்கும் வரை, சாத்தான் நமது பலவீனங்களைக் கண்டறிந்து, அதன் வழியாக அவனது தாக்குதல்களால் நுழைந்து, நம் இதயங்களை சேதப்படுத்திவிடுவான். எனவே, நாம் நமது சொந்த நீதியை

## ஆவிக்குரிய யுத்தம் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அடிப்படை விஷயங்கள்

Free Digitial Copy From ServeNow

சார்ந்திராமல், கிறிஸ்துவின் நீதியாகிய மார்க்கவசத்தை அணிய வேண்டும். 2 கொரிந்தியர் 5:21-ல் *நாம் இவ்வாறு வாசிக்கிறோம், நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை (இயேசுவை) நமக்காகப் பாவமாக்கினார்.*

தவறான நோக்கங்களைக் கொண்ட விசுவாசிகள் தேவனுடைய நீதியாகிய ஆயுதம் தரிக்காமல் ஆவிக்குரிய யுத்தங்களில் இறங்கிய பல சந்தர்ப்பங்கள் உள்ளன. அவர்கள் விரும்பிய பலன்களைப் பெற முடியாமல் போனதுமட்டுமல்லாமல், கடுமையான சிரமங்களையும் எதிர்கொண்டனர். அப்போஸ்தலர் 19:13-16-ல் ஸ்கேவாவின் ஏழு மகன்களைப் பற்றி நாம் வாசிக்கிறோம்:

*அப்பொழுது தேசாந்தரிகளாய்த்திரிகிற மந்திரவாதிகளாகிய யூதரில் சிலர் பொல்லாத ஆவிகள் பிடித்திருந்தவர்கள்மேல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைச் சொல்லத் துணிந்து; பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின்பேரில் ஆணையிட்டு உங்களுக்குக் கட்டளையிடுகிறோம் என்றார்கள். பிரதான ஆசாரினாகிய ஸ்கேவா என்னும் ஓர் யூதனுடைய குமாரர் ஏழுபேர் இப்படிச் செய்தார்கள். பொல்லாத ஆவி அவர்களை நோக்கி; இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன், நீங்கள் யார் என்று சொல்லி, பொல்லாத ஆவியையுடைய மனுஷன் அவர்கள்மேல் பாய்ந்து, பலாத்காரம்பண்ணி, அவர்களை மேற்கொள்ள, அவர்கள் நிருவாணிகளும் காயப்பட்டவர்களுமாகி அந்த வீட்டை விட்டு ஓடிப்போனார்கள்.*

இந்த மனிதர்கள் பவுல் பயன்படுத்திய அதே செயல்களைச் செய்ய முற்பட்டனர், பவுல் பேசிய அதே வார்த்தைகளைப் பேசினர். அவர்கள் இயேசுவின் நாமத்தையும் கூடப் பயன்படுத்தினர். இருப்பினும், இதயத்தை உண்மையிலேயே பாதுகாக்கும் நீதியெனும் ஆவிக்குரிய மார்க்கவசத்தால் நாம் பாதுகாக்கப்படாமல் இருப்பது, சாத்தானுக்குத் தெரியும். ஸ்கேவாவின் மகன்களுக்கு எதிராக யுத்தம் நடந்தது, அவர்கள் காயமடைந்த அவமானத்தில் தப்பி ஓட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

சாத்தான் அநியாயமாக நம்மைக் கண்டிக்கவோ அல்லது தேவன் ஏற்கனவே நம்மை மன்னித்துவிட்ட கடந்த கால தவறுகளுக்கு நம்மை நாம் மன்னிக்கத் தவறவோ கூடாது என்பதில் கவனமாக இருந்து, நம்மீது ஆக்கினைத்தீர்ப்பை வரவழைக்காத வகையில் நடக்க நாம் கவனமாக இருக்க வேண்டும். நாம் தேவனை விட்டு

Free Digitial Copy From ServeNow

விலகும்போது, உடனடியாக அவருடன் மீண்டும் ஐக்கியத்தையும் அவரில் நீதியையும் உடனடியாக நாட வேண்டும். *நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.* (1 யோவான் 1:9)

## *சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சை*

சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய பாதரட்சைகள் ஆயத்தத்தைக் குறிக்கின்றன. அவை நம்மை செயல்பட ஆயத்தப்படுத்துகின்றன. சில கலாச்சாரங்களில், ஒருவரின் காலணிகளைக் கழற்றுவது மரியாதை, துக்கம் அல்லது சமர்ப்பிப்பு ஆகியவற்றின் அடையாளத்துக்கான செயலாகும். ஒரு சிப்பாய் தனது காலணிகளை அணிவது, அவன் கடமையை செய்யும்படி, எதிரியை எதிர்கொள்ளத் தயாராகி வருவதைக் குறிக்கிறது. கிறிஸ்தவ வீரர்களாக, சுவிசேஷத்தால் எதிரியின் பிரதேசத்தை ஆக்கிரமித்து மக்களை தேவனுடன் ஒப்புரவாக்க நாம் நமது சமாதானத்தின் காலணிகளை அணிகிறோம்.

சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் எனும் காலணிகள், விருப்பத்தையும், ஆர்வத்தையும் கூட வெளிப்படுத்துகின்றன. இயேசு பரமேறிச்செல்வதற்கு முன் தமது சீஷர்களுக்குக் கொடுத்த கடைசி கட்டளை இது: *ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, …* (மத்தேயு 28:19)

தேவ பிள்ளைகள் ஒவ்வொருவரும், அவரவர் செல்வாக்கு இருக்கும் எல்லைகளில் சமாதானத்தின் சுவிசேஷத்தைப் பரப்புவதற்காக தயாராக இருக்கும்படி அழைக்கப்படுகிறார்கள். உங்கள் செல்வாக்கு உள்ள மண்டலம் எதுவாக இருந்தாலும் சரி, நீங்கள் ஒரு இல்லத்தரசியாக இருந்தாலும் சரி, ஒரு தொழில் செய்பவராக இருந்தாலும் சரி, கூலிக்கு வேலை செய்பவராக இருந்தாலும் சரி… உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய வல்லமையை உங்கள் ஊழியம் தேவைப்படும் மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளத் தயாராகவும் ஆர்வத்துடனும் இருங்கள்.

# <u>ஆவிக்குரிய யுத்தம் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அடிப்படை விஷயங்கள்</u>

Free Digitial Copy From ServeNow

## ***விசுவாசம் எனும் கேடயம்***

சரியாகப் பயிற்சி பெற்ற ஒரு போர்வீரன், எதிரியின் ஏவுகணைகள் தனது உடலின் எந்தப் பகுதியையும் அடைய முடியாதபடி ஒரு கேடயத்தைப் பயன்படுத்துகிறான். விசுவாசம் எனும் கேடயம் பிசாசின் அக்கினி அம்புகளுக்குத் தப்பும்படி முழுவதுமாக விசுவாசிகளைப் பாதுகாக்கிறது. *எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள்* (எபேசியர் 6:16) என்று பவுல் கூறினார்.

பொல்லாத ஆவிக்குரியத் தாக்குதல்களின் மத்தியில் விசுவாசம் நமக்கு தேவனிடமிருந்து பலத்தைத் தருகிறது, மேலும் சத்துரு ஒரு விசுவாசியின் மீது எறியும் அக்கினி அம்புகளைத் தடுக்கும் உறுதியான தீர்மானத்தை அது உருவாக்குகிறது. அக்கினி அம்புகள் பொல்லாங்கனால் திட்டமிடப்பட்ட ஒவ்வொரு வகையான தாக்குதலையும் குறிக்கின்றன, அது சோதனையை மட்டுமல்ல, துன்புறுத்தல், சந்தேகம் மற்றும் விரக்தியையும் கூட குறிக்கும். விசுவாசம் என்பது விசுவாசிகள் அத்தகைய தாக்குதல்களை வெல்ல உதவும் வல்லமையாகும்.

பிசாசை எதிர்ப்பதற்கு உறுதியான விசுவாசம் அவசியம். பேதுரு கூறினார், *தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள். ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள். உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே.* (1 பேதுரு 5:8-9)

.எபிரெயர் 11:6 *விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்* என்று போதிக்கிறது,

விசுவாசம் இல்லாமல், நாம் சத்தியத்தைப் பற்றிக்கொள்ள முடியாது. விசுவாசம் இல்லாமல், இயேசு கிறிஸ்துவில் உள்ள நீதியை நாம் சொந்தமாக்கிக்கொள்ள முடியாது. விசுவாசம் இல்லாமல், உலகிற்கு சமாதானத்தின் சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல முடியாது.

## ஆவிக்குரிய யுத்தம் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அடிப்படை விஷயங்கள்

Free Digital Copy From Serve Now

### *இரட்சணியமெனும் தலைச்சீரா*

தலைச்சீரா தலைக்குப் பாதுகாப்பை அளிக்கிறது, அது மனதை உள்ளடக்கியது. தேவனில் நிலைத்திருக்காத மனம் சாத்தானின் ஆலோசனைகளுக்கு ஒரு விளையாட்டு மைதானமாக மாறி, சத்தியத்துக்கு நம்மை விலக்கி, தவறான முடிவுகளுக்கும் செயல்களுக்கும் நேராக இழுக்கும். பவுல் நம் மனதைத் தொடர்ந்து புதுப்பிக்குமாறு அறிவுறுத்துகிறார்.

*நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.* (ரோமர் 12:2 TAOVBSI)

உலகத்தில் உள்ள மக்கள் நாம் வார்த்தையிலும் செயலிலும் கிறிஸ்தவர்கள் என்பதை அங்கீகரிக்கும் வகையில், நமது புதிதாக்கப்பட்ட மனம் நமது நடத்தையில் முற்றிலும் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். கிறிஸ்துவில் நமது மனதைப் புதுப்பித்துக்கொள்வது நம்மை வஞ்சகத்திலிருந்து பாதுகாக்கிறது.

எதிர்மறையான எண்ணங்களில் நிலைத்திருக்கும் ஒரு நபர் ஒருபோதும் தேவனுக்கு நேர்மறையான வல்லமையுள்ள நபராக இருக்க முடியாது. நாம் எப்படிப்பட்ட எண்ணங்களை உடையவர்களாய் இருக்க வேண்டும் என்பதை தேவன் தாமே நமக்குச் சொல்லியிருக்கிறார்: *கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்.* (பிலிப்பியர் 4:8)

### *ஆவியின் பட்டயம்*

ஆவியின் பட்டயம் தேவனுடைய வார்த்தை. அவருடைய வார்த்தையானது, சத்துரு நமக்கு எதிராக வரும்போது அவன் தாக்குதல்களை முறியடிக்கும் ஒரு பாதுகாப்பு ஆயுதமாக செயல்படுவது மட்டுமல்லாமல், சாத்தானின் சொந்த எல்லையை தகர்ப்பதற்கான ஒரு தாக்குதல் ஆயுதமாகவும் இருக்கிறது. விசுவாசிகளாகிய நாம் நமது யுத்தத்தில் தற்காப்புக்காக மட்டும் இதைப் பயன்படுத்துபவர்களாக இல்லாமல், தாக்குதலுக்காக பயன்படுத்த முன்னேற வேண்டும், சாத்தானின் எல்லைக்குள்

Free Digitial Copy From ServeNow

உண்மையில் எவ்வாறு படையெடுத்துச் செல்வது மற்றும் வெற்றி பெற்று போரில் கிடைத்த ஏராளமான கொள்ளைப் பொருட்களை எவ்வாறு எடுத்துச் செல்வது என்பதைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

நாம் தேவனிடமிருந்து முழுமையான பாதுகாப்பையும் அடைக்கலத்தையும் பெற்றிருக்கிறோம், ஏனென்றால், *உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோகும்; உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய்; இது கர்த்தருடைய ஊழியக்காரரின் சுதந்தரமும், என்னாலுண்டான அவர்களுடைய நீதியுமாயிருக்கிறதென்று கர்த்தர் சொல்லுகிறார்*. (ஏசாயா 54:17 TAOVBSI)

.

தேவனுடைய வார்த்தையை நாம் எவ்வளவு அதிகமாக அறிந்திருக்கிறோமோ, அவ்வளவு திறமையாக இந்த ஆயுதத்தை பொல்லாத வல்லமைகளை எதிர்க்கப் பயன்படுத்துவோம். இருப்பினும், பயன்படுத்தப்படாத ஆயுதங்களால் எதிரிக்கு உயிரிழப்புகளை ஏற்படுத்தவோ அல்லது யுத்தங்களில் வெற்றி பெறவோ முடியாது. எனவே, ஒரு ஆவிக்குரிய யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது என்பதை வெறுமனே ஒப்புக்கொள்வது போதாது, எல்லா நேரங்களிலும் சத்துருவுக்கு எதிராக இந்த ஆயுதத்தைப் பயன்படுத்த வேண்டும். நாம் சத்துருவைத் திருப்பித் தாக்காமல் அமைதியாக இருந்துவிட வேண்டும் என்றே பிசாசு விரும்புகிறான். இது ஆவிக்குரிய யுத்தத்துக்கான நமது வைராக்கியத்தைக் குறைப்பதற்கான அவனது தந்திரமாகும்.

## நமது யுத்தத்தின் பிற ஆயுதங்கள்

### *ஜெபம்*

தேவன் கிரியை செய்வதை நாம் காண விரும்பினால், அரண்களை நிர்மூலமாக்கத்தக்க ஜெபத்தில் நாம் ஈடுபட வேண்டியிருக்கும். இது நாம் வழக்கமாக காலை உணவு மேசையிலோ அல்லது ஐந்து நிமிட ஆராதனைகளிலோ செய்யும் ஜெபம் அல்ல. இவ்வகையான ஜெபம் ஒருபோதும் எதிரியைத் தோற்கடிக்கவோ, இந்த உலகத்தின் மீதான அவனது பிடியிலிருந்து அவனைத் தளர்விக்கவோ முடியாது. அவனைத் தனது இரையை விட்டுவிடச் செய்வதற்கு அதை விட அதிகமான முயற்சியுடன் செயல்பட வேண்டும். அதுதான் *வேதனை,*

## ஆவிக்குரிய யுத்தம் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அடிப்படை விஷயங்கள்

Free Digitial Copy From Servant Now

*வெற்றி, ஆவியின் போராட்டம்.* இது மனிதர்களையும் தேசங்களையும் தேவன் பக்கமாகத் திருப்புகிறது. இப்படிப்பட்ட வல்லமையான ஜெபம் தானியேல் 10:1-12-ல் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது:

*பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் அரசாண்ட மூன்றாம் வருஷத்திலே பெல்தெஷாத்சார் என்று பெயரிடப்பட்ட தானியேலுக்கு ஒரு காரியம் வெளியாக்கப்பட்டது; அந்தக் காரியம் சத்தியமும் நீடிய யுத்தத்துக்கு அடுத்ததுமாயிருக்கிறது; அந்தக் காரியத்தை அவன் கவனித்து, தரிசனத்தின் பொருளை அறிந்துகொண்டான்.*

*அந்த நாட்களில் தானியேலாகிய நான் மூன்று வாரமுழுவதும் துக்கித்துக்கொண்டிருந்தேன். அந்த மூன்று வாரங்களாகிய நாட்கள் நிறைவேறுமட்டும் ருசிகரமான அப்பத்தை நான் புசிக்கவுமில்லை, இறைச்சியும் திராட்சரசமும் என் வாய்க்குள் போகவுமில்லை, நான் பரிமளதைலம் பூசிக்கொள்ளவுமில்லை. முதலாம் மாதம் இருபத்துநாலாந்தேதியிலே நான் இதெக்கேல் என்னும் பெரிய ஆற்றங்கரையில் இருந்து, என் கண்களை ஏறெடுக்கையில், சணல் வஸ்திரந்தரித்து, தமது அரையில் ஊப்பாசின் தங்கக்கச்சையைக் கட்டிக்கொண்டிருக்கிற ஒரு புருஷனைக் கண்டேன். அவருடைய சரீரம் படிகப்பச்சையைப்போலவும், அவருடைய முகம் மின்னலின் பிரகாசத்தைப்போலவும், அவருடைய கண்கள் எரிகிற தீபங்களைப்போலவும், அவருடைய புயங்களும் அவருடைய கால்களும் துலக்கப்பட்ட வெண்கல நிறத்தைப்போலவும், அவருடைய வார்த்தைகளின் சத்தம் ஜனக்கூட்டத்தின் ஆரவாரத்தைப்போலவும் இருந்தது.*

*தானியேலாகிய நான் மாத்திரம் அந்தத் தரிசனத்தைக் கண்டேன்; என்னோடே இருந்த மனுஷரோ அந்தத் தரிசனத்தைக் காணவில்லை; அவர்கள் மிகவும் நடுநடுங்கி, ஓடி ஒளித்துக்கொண்டார்கள், நான் தனித்துவிடப்பட்டு அந்தப் பெரிய தரிசனத்தைக் கண்டேன்; என் பெலனெல்லாம் போயிற்று; என் உருவம் மாறி வாடிப்போயிற்று; திடனற்றுப்போனேன். அவருடைய வார்த்தைகளின் சத்தத்தைக் கேட்டேன்; அவருடைய வார்த்தைகளின் சத்தத்தை நான் கேட்கும்போது, நான் முகங்கவிழ்ந்து, நித்திரை போகிறவனாய்த் தரையிலே முகங்குப்புற விழுந்து கிடந்தேன்.*

*இதோ, ஒருவன் கை என்னைத் தொட்டு, என் முழங்கால்களும் என் உள்ளங்கைகளும் தரையை ஊன்றியிருக்க என்னைத் தூக்கிவைத்தது. அவன் என்னை நோக்கி: பிரியமான புருஷனாகிய*

## ஆவிக்குரிய யுத்தம் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அடிப்படை விஷயங்கள்

Free Digitial Copy From Servant Now

*தானியேலே, நான் இப்போது உன்னிடத்திற்கு அனுப்பப்பட்டு வந்தேன்; ஆதலால், நான் உனக்குச் சொல்லும் வார்த்தைகளின்பேரில் நீ கவனமாயிருந்து, கால் ஊன்றி நில் என்றான்; இந்த வார்த்தையை அவன் என்னிடத்தில் சொல்லுகையில் நடுக்கத்தோடே எழுந்து நின்றேன்.*

*அப்பொழுது அவன் என்னை நோக்கி: தானியேலே, பயப்படாதே; நீ அறிவை அடைகிறதற்கும், உன்னை உன்னுடைய தேவனுக்கு முன்பாகச் சிறுமைப்படுத்துகிறதற்கும், உன் மனதைச் செலுத்தின முதல்நாள் துவக்கி உன் வார்த்தைகள் கேட்கப்பட்டது; உன் வார்த்தைகளினிமித்தம் நான் வந்தேன்.*

இங்கே ஆவிக்குரிய சக்திகள் போரில் ஈடுபட்டன, அது என்ன போர்! பதில் வருவதற்கு முன்பு தானியேல் மூன்று வாரங்கள் தேவனைத் தேடினான். ஆனாலும், முதல் நாளிலேயே அவனது ஜெபம் கேட்கப்பட்டதாக பரலோக தூதன் அவனிடம் கூறினான். திரைக்குப் பின்னால் ஒரு யுத்தம் நடந்து கொண்டிருந்தது. பொல்லாத சக்திகள் தேவனுடைய பரலோக தூதரை எதிர்த்தன, ஆனால் தானியேல் தொடர்ந்து ஜெபித்தான், தேவன் தொடர்ந்து உதவியை அனுப்பினார்.

விளைவு எதுவாக இருந்தாலும், நாம் ஜெபத்தில் விடாமுயற்சியுடன் இருக்கும்போது நிச்சயமாக வெற்றி கிடைக்கும். ஆவிக்குரிய யுத்தம் தொடர்ச்சியாக இருப்பதால், அவர்களின் ஜெபங்கள் தொடர்ச்சியாக இருக்க வேண்டும் என்பதை ஆரம்பகால திருச்சபை விரைவாகக் கற்றுக்கொண்டது. பெந்தேகோஸ்தே நாளுக்குப் பிறகு பதிவுசெய்யப்பட்ட ஆரம்பகால நிர்வாக தீர்மானம், ஜெப ஊழியத்தை (வார்த்தையால் செய்யும் ஊழியம்) மிக முக்கியமானதாகக் காட்டுகிறது. ஆதித் திருச்சபை ஒரு சிக்கலை எதிர்கொண்டது, அவர்கள் அதை எவ்வாறு சரிசெய்தார்கள் என்பதை இங்கே பார்க்கலாம்:

*அந்நாட்களிலே, சீஷர்கள் பெருகினபோது, கிரேக்கரானவர்கள், தங்கள் விதவைகள் அன்றாடக விசாரணையில் திட்டமாய் விசாரிக்கப்படவில்லையென்று, எபிரெயருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள். அப்பொழுது பன்னிருவரும் சீஷர் கூட்டத்தை வரவழைத்து: நாங்கள் தேவவசனத்தைப் போதியாமல், பந்திவிசாரணை செய்வது தகுதியல்ல. ஆதலால் சகோதரரே, பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்துகொள்ளுங்கள்; அவர்களை இந்த*

Free Digital Copy From ServeNow

*வேலைக்காக ஏற்படுத்துவோம். நாங்களோ ஜெபம்பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம் என்றார்கள்.* (அப்போஸ்தலர் 6:1-4 TAOVBSI) ஜெபத்திலே உறுதியாய்த் தனித்திருக்க வேண்டும் (ரோமர் 12:12, TAOVBSI) என்று பவுல் ரோமாபுரியிலுள்ள சபைக்குச் சொன்னான்.

### *இயேசுவின் நாமம்*

நாம் பயன்படுத்த வேண்டிய மற்றொரு வல்லமை வாய்ந்த ஆயுதம் இயேசுவின் நாமம். சத்துருவும் பழிவாங்குபவனும் சாத்தான் ஆவான், அவனை அடக்குவதற்கு தேவன் நமக்கு வழிவகைகளைக் கொடுத்திருக்கிறார். அந்த ஆயுதம் என்ன? அது இயேசுவின் நாமம். விசுவாசிகளாகிய நாம், சாத்தானைத் தோற்கடிக்கவும், அவனுடைய செயல்களையும் சக்தியையும் அழிக்கவும் இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்த உரிமை பெற்றுள்ளோம். மாற்கு 16:17-18-ல், இயேசு நமக்குக் கட்டளையிட்டு, சத்துருவுக்கு எதிராகத் தம்முடைய நாமத்தைப் பயன்படுத்துவதற்கான உரிமையை நமக்கு வழங்கினார்:

*விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார்.*

### *விசுவாசிகளின் அதிகாரம்*

விசுவாசிகளான நாம் கிறிஸ்து இயேசுவின் மூலம் எல்லா பொல்லாத ஆவிகள் மீதும் அதிகாரம் பெற்றுள்ளோம். பிசாசுடனான நமது போராட்டத்தில், எப்போதும் அவன் மீது நமக்கு அதிகாரம் உள்ளது என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும், ஏனென்றால் அவன் தோற்கடிக்கப்பட்ட சத்துரு - கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நமக்காக அவனைத் தோற்கடித்துவிட்டார்.

*துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே*

Free Digitial Copy From ServeNow

*வெற்றிசிறந்தார்.* (கொலோசெயர் 2:15 TAOVBSI)

*பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான், பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்.* (1 யோவான் 3:8 TAOVBSI)

*ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும்,* (எபிரெயர் 2:14 TAOVBSI)

சில விசுவாசிகள், தேவன் விசேஷமாக அதிகாரம் கொடுக்கும்படி தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருக்கு மட்டுமே பிசாசின் மீது அதிகாரம் என்பது சொந்தமானது என்று நினைக்கிறார்கள். இது உண்மையல்ல. அதிகாரம் தேவனுடைய பிள்ளைகள் அனைவருக்கும் சொந்தமானது! நாம் மறுபடியும் பிறக்கும்போது இந்த அதிகாரத்தைப் பெறுகிறோம். கிறிஸ்து இயேசுவில் நாம் புதிய சிருஷ்டிகளாக மாற்றப்படுவதால், நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை ஏற்றுக்கொள்கிறோம், மேலும் சத்துருவுக்கு எதிராக ஜெபத்தில் நாம் அதைப் பயன்படுத்தலாம்.

இயேசு பன்னிரண்டு சீஷர்களையும் ஒன்றாகக் கூடிவரச் செய்து, சாத்தான் மீது, தம்முடைய நாமத்தில், வல்லமையையும் அதிகாரத்தையும் செலுத்தும் உரிமையை அவர்களுக்குக் கொடுத்தார்.

இயேசு இவ்வாறு கூறினார், *இதோ, சர்ப்பங்களையும், தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகலவல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது.* (லூக்கா 10:19 TAOVBSI)

இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் மற்றும் பரமேறுதலுக்குப் பிறகு உண்டாயிருந்ததை விட, நம் காலத்தில்

Free Digitial Copy From ServeNow

உள்ள திருச்சபைக்கு அதிகாரம் குறைவாக உள்ளதா? இல்லை. இன்று அதற்கு அதிகாரம் குறைந்திருக்கிறது என்றால், இயேசு மரிக்காமலே இருந்திருக்கலாம். ஆனால் தேவனுக்கு ஸ்தோத்திரம், நாம் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறோம்!

## *இயேசுவின் இரத்தம்*

பிசாசை ஜெயிப்பதற்கு இரத்தம் நமது முக்கியத் திறவுகோளாக இருக்கிறது. வெளிப்படுத்தல் 12:11 கூறுகிறது, *ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் ... அவனை ஜெயித்தார்கள்.*

சிலுவையில் பாடுபட்டு, இரத்தம் சிந்துவதன் மூலம் சத்துருவின் தலையை நசுக்க இயேசு வந்தார். அவருடைய இரத்தம் நம்மை குணமாக்க, இரட்சிக்க மற்றும் விடுவிக்கவல்லது. அது நமக்கு சமாதானத்தைத் தந்து, குற்ற உணர்வு, துக்கம் மற்றும் துன்பத்திலிருந்து விடுவிக்கிறது.

இயேசுவின் இரத்தம் உங்கள் வாழ்க்கைக்குள் முழுமையாக வந்தவுடன், அதன்பிறகு, உங்களிடம் அல்லது உங்கள் வாழ்க்கையில் எந்தப் பகுதியிலும் சாத்தானுக்கு எவ்வித சட்டப்பூர்வ உரிமையும் இல்லை. மரணத்தின் வலிமையிலிருந்தும், பயத்திலிருந்தும், சாத்தான் உங்கள் வாழ்க்கையில் ஏற்படுத்த முயற்சிக்கும் அனைத்து வகையான பிரச்சனைகளிலிருந்தும் நீங்கள் விடுவிக்கப்பட்டிருக்கிறீர்கள். இயேசு உங்கள் வாழ்க்கையில் பிசாசின் பிடியைத் தகர்த்துவிட்டார். அவருடைய இரத்தம் சாத்தானின் கிரியையையும் அவனது ராஜ்யத்தையும் அழித்துவிட்டது. அவருடைய இரத்தம் விசுவாசிகளுக்கு பாவத்தை எதிர்க்கும் வல்லமையை அளிக்கிறது, மேலும் பிசாசை உங்களை விட்டு ஓட வைக்கிறது.

*ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்.* (யாக்கோபு 4:7 TAOVBSI)

*தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்;*

## ஆவிக்குரிய யுத்தம் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அடிப்படை விஷயங்கள்

Free Digitial Copy From ServeNow

*உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே.* (1 பேதுரு 5:8-9 TAOVBSI)

இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தை போலியாகப் பயன்படுத்த சாத்தானுக்கு எந்த வழியும் இல்லை. அவனிடம் அதற்கு எந்த பதிலும் இல்லை, அதற்கு எதிராக எந்தப் பாதுகாப்பும் இல்லை. அதனால்தான், அவன் கிறிஸ்துவின் இரத்தத்தை வெறுக்கிறான். அந்த இரத்தத்தினாலேயே நாம் அவனை ஜெயிக்க முடியும். சாத்தான் நமக்கு எதிராகக் கொண்டுவரும் எதுவும் இயேசுவின் இரத்தத்திற்கு முன்னால் நிலைநிற்க முடியாது: பொய், அவதூறு, குற்றச்சாட்டு, ஆக்கினைத்தீர்ப்பு, குற்ற உணர்வு, அவமானம் என எதுவும் நிலைநிற்காது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தால் நாம் ஜெயிக்க முடியும்.

### துதி

குறிப்பாக தேவனுடைய ஜனங்களுக்கு சத்துருக்களாய் இருப்பவர்களுக்கு முன்பாக, துதி அவருடைய அச்சமின்மையை வெளிப்படுத்துகிறது மற்றும் தேவனுடைய மகத்துவத்தைக் குறிக்கிறது. துதி என்பது தேவனுடைய மகத்துவத்துக்கும், தங்கள் சார்பாக யுத்தம் செய்து, பழிவாங்கும் அவரது பயங்கரமான செயல்களுக்கும் தேவ ஜனங்கள் அவருக்கு வழங்கும் ஏற்ற கிரியையாகும்.

சங்கீதம் 8:2 இவ்வாறு கூறுகிறது, *பகைஞனையும் பழிகாரனையும் அடக்கிப்போட, தேவரீர் உம்முடைய சத்துருக்களினிமித்தம் குழந்தைகள் பாலகர் வாயினால் பெலன் உண்டுபண்ணினீர்.*

மத்தேயு 21:16 இவ்வாறு கூறுகிறது, *அவரை நோக்கி: இவர்கள் சொல்லுகிறதைக் கேட்கிறீரோ என்றார்கள். அதற்கு இயேசு: ஆம், கேட்கிறேன். குழந்தைகளுடைய வாயினாலும் பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர் என்பதை நீங்கள் ஒருக்காலும் வாசிக்கவில்லையா என்றார்.*

தேவன் தம்முடைய ஜனங்களுக்கு சத்துருக்களை எதிர்த்து நிற்க பலம் அளித்திருப்பதை நாம் காண்கிறோம். துதிதான் அந்த பலம். துதி எதிரியை அடக்குகிறது. சாத்தானையும் அவனுடைய பிசாசுகளையும் அடக்கிவிட்டாலே, நமது பல பிரச்சனைகளுக்குத்

Free Digitial Copy From ServeNow

தீர்வு கிடைத்துவிடும்! இதைத் துதியின் மூலம் மட்டுமே செய்ய முடியும்.
அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் 16 ஆம் அதிகாரத்தில், ஒரு அடிமைப் பெண்ணிடமிருந்து பிசாசை விரட்டியதற்காக அடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட பவுலும் சீலாவும், அந்த இடத்தில், சாத்தியமற்றதாகத் தோன்றும் சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் துதி மிகவும் பயனுள்ளதாக இருந்ததைக் கண்டனர். சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமல், அவர்களது விளைவு எதுவாக இருந்தாலும் பரவாயில்லை என்று தீர்மானித்து, அதன் மத்தியில் அவரை முழுமையாக நம்பலாம் என்பதை அறிந்த அவர்கள் தேவனைத் துதித்தனர்.

பழைய ஏற்பாட்டில் யோசபாத் என்ற ராஜாவைப் பற்றிய ஒரு கதை உள்ளது. 2 நாளாகமம் 20:1-30-ல் நாம் அதை வாசிக்கிறோம், *இதற்குப்பின்பு மோவாப் புத்திரரும், அம்மோன் புத்திரரும், அவர்களோடே அம்மோனியருக்கு அப்புறத்திலுள்ள மனுஷருங்கூட யோசபாத்திற்கு விரோதமாய் யுத்தம்பண்ண வந்தார்கள். சிலர் வந்து, யோசபாத்தை நோக்கி: உமக்கு விரோதமாய் ஏராளமான ஜனங்கள் கடலுக்கு அக்கரையிலிருக்கிற சீரியாவிலிருந்து வருகிறார்கள்; இதோ, அவர்கள் எங்கேதியாகிய ஆசாசோன் தாமாரில் இருக்கிறார்கள் என்று அறிவித்தார்கள். அப்பொழுது யோசபாத் பயந்து, கர்த்தரைத் தேடுகிறதற்கு ஒருமுகப்பட்டு, யூதாவெங்கும் உபவாசத்தைக் கூறுவித்தான்.*

*அப்படியே யூதா ஜனங்கள் கர்த்தரிடத்திலே சகாயந்தேடக் கூடினார்கள்; யூதாவிலுள்ள எல்லாப் பட்டணங்களிலும் இருந்து அவர்கள் கர்த்தரைத் தேட வந்தார்கள். அப்பொழுது யோசபாத் கர்த்தருடைய ஆலயத்திலே புதுப்பிராகாரத்து முகப்பிலே, யூதா ஜனங்களும் எருசலேமியரும் கூடின சபையிலே நின்று:*

*எங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தாவே, பரலோகத்திலிருக்கிற நீர் அல்லவோ தேவன்; தேவரீர் ஜாதிகளுடைய ராஜ்யங்களையெல்லாம் ஆளுகிறவர்; உம்முடைய கரத்திலே வல்லமையும் பராக்கிரமமும் இருக்கிறது, ஒருவரும் உம்மோடு எதிர்த்து நிற்கக்கூடாது.*

*எங்கள் தேவனாகிய நீர் உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு முன்பாக இந்த தேசத்துக் குடிகளைத் துரத்திவிட்டு இதை உம்முடைய சிநேகிதனாகிய ஆபிரகாமுடைய சந்ததிக்கு என்றைக்குமென்று கொடுக்கவில்லையா? ஆதலால் அவர்கள் இங்கே குடியிருந்து, இதிலே உம்முடைய நாமத்திற்கென்று ஒரு*

Free Digital Copy From Servant Now

*பரிசுத்த ஸ்தலத்தைக் கட்டினார்கள். எங்கள்மேல் பட்டயம், நியாயதண்டனை, கொள்ளைநோய், பஞ்சம் முதலான தீமைகள் வந்தால், அப்பொழுது உம்முடைய நாமம் இந்த ஆலயத்தில் விளங்குகிறபடியால், நாங்கள் இந்த ஆலயத்திலும் உமது சந்நிதியிலும் வந்து நின்று, எங்கள் இடுக்கணில் உம்மை நோக்கிக் கூப்பிடுகையில், தேவரீர் கேட்டு இரட்சிப்பீர் என்று சொல்லியிருக்கிறார்கள்.*

*இப்போதும், இதோ, இஸ்ரவேலர் எகிப்து தேசத்திலிருந்து வருகிறபோது, அம்மோன் புத்திரர், மோவாபியர், சேயீர் மலைதேசத்தாருடைய சீமைகள் வழியாய்ப் போக நீர் உத்தரவு கொடுக்கவில்லை; ஆகையால் அவர்களை விட்டு விலகி, அவர்களை நாசப்படுத்தாதிருந்தார்கள்.*

*இப்போதும், இதோ, அவர்கள் எங்களுக்கு நன்மைக்குத் தீமையைச் சரிக்கட்டி, தேவரீர் எங்களைச் சுதந்தரிக்கப்பண்ணின உம்முடைய சுதந்தரத்திலிருந்து எங்களைத் துரத்திவிட வருகிறார்கள்.*

*எங்கள் தேவனே, அவர்களை நீர் நியாயந்தீர்க்கமாட்டீரோ? எங்களுக்கு விரோதமாக வந்த இந்த ஏராளமான கூட்டத்திற்கு முன்பாக நிற்க எங்களுக்குப் பெலனில்லை; நாங்கள் செய்யவேண்டியது இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை; ஆகையால் எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக்கொண்டிருக்கிறது என்றான்.*

*யூதா கோத்திரத்தார் அனைவரும், அவர்கள் குழந்தைகளும், அவர்கள் பெண்ஜாதிகளும், அவர்கள் குமாரருங்கூட கர்த்தருக்கு முன்பாக நின்றார்கள். அப்பொழுது சபையின் நடுவிலிருக்கிற மத்தனியாவின் குமாரனாகிய ஏயெலின் மகனான பெனாயாவுக்குப் பிறந்த சகரியாவின் புத்திரன் யகாசியேல் என்னும் ஆசாப்பின் புத்திரரில் ஒருவனான லேவியன்மேல் கர்த்தருடைய ஆவி இறங்கினதினால் அவன் சொன்னது:*

*சகல யூதா கோத்திரத்தாரே, எருசலேமின் குடிகளே, ராஜாவாகிய யோசபாத்தே, கேளுங்கள்; நீங்கள் அந்த ஏராளமான கூட்டத்திற்குப் பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள் என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்லுகிறார்; இந்த யுத்தம் உங்களுடையதல்ல, தேவனுடையது.*

*நாளைக்கு நீங்கள் அவர்களுக்கு விரோதமாய்ப் போங்கள்; இதோ, அவர்கள் சிஸ் என்னும் மேட்டுவழியாய் வருகிறார்கள்; நீங்கள் அவர்களை யெருவேல் வனாந்தரத்திற்கு எதிரான பள்ளத்தாக்கின்*

Free Digital Copy From ServeNow

*கடையாந்தரத்திலே கண்டு சந்திப்பீர்கள். இந்த யுத்தத்தைப் பண்ணுகிறவர்கள் நீங்கள் அல்ல; யூதா மனுஷரே, எருசலேம் ஜனங்களே, நீங்கள் தரித்து நின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள்; நாளைக்கு அவர்களுக்கு எதிராகப் புறப்படுங்கள்; கர்த்தர் உங்களோடே இருக்கிறார் என்றான்.*

*அப்பொழுது யோசபாத் தரைமட்டும் முகங்குனிந்தான்; சகல யூதா கோத்திரத்தாரும் எருசலேமின் குடிகளும் கர்த்தரைப் பணிந்துகொள்ளக் கர்த்தருக்கு முன்பாகத் தாழவிழுந்தார்கள். கோகாத்தியரின் புத்திரரிலும் கோராகியரின் புத்திரரிலும் இருந்த லேவியர் எழுந்திருந்து, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை மகா சத்தத்தோடே கெம்பீரமாய்த் துதித்தார்கள்.*

*அவர்கள் அதிகாலமே எழுந்திருந்து, தெக்கொவாவின் வனாந்தரத்திற்குப் போகப் புறப்பட்டார்கள்; புறப்படுகையில் யோசபாத் நின்று: யூதாவே, எருசலேமின் குடிகளே, கேளுங்கள்; உங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புங்கள், அப்பொழுது நிலைப்படுவீர்கள்; அவருடைய தீர்க்கதரிசிகளை நம்புங்கள், அப்பொழுது சித்திபெறுவீர்கள் என்றான்.*

*பின்பு அவன் ஜனத்தோடே ஆலோசனைபண்ணி, பரிசுத்தமுள்ள மகத்துவத்தைத் துதிக்கவும், ஆயுதம் அணிந்தவர்களுக்கு முன்னாக நடந்துபோய், கர்த்தரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றும் உள்ளதென்று கர்த்தரைப் பாடவும், பாடகரை நிறுத்தினான்.*

*அவர்கள் பாடித் துதிசெய்யத் தொடங்கினபோது, யூதாவுக்கு விரோதமாய் வந்து பதிவிருந்த அம்மோன் புத்திரரையும், மோவாபியரையும், சேயீர் மலைதேசத்தாரையும், ஒருவருக்கு விரோதமாய் ஒருவரைக் கர்த்தர் எழும்பப்பண்ணினதினால் அவர்கள் வெட்டுண்டு விழுந்தார்கள். எப்படியெனில், அம்மோன் புத்திரரும் மோவாபியரும், சேயீர் மலைதேசக்குடிகளைச் சங்கரிக்கவும் அழிக்கவும் அவர்களுக்கு விரோதமாய் எழும்பினார்கள்; சேயீர் குடிகளை அழித்துத் தீர்ந்தபோது, தாங்களும் தங்களில் ஒருவரையொருவர் அழிக்கத்தக்கவிதமாய்க் கைகலந்தார்கள்.*

*யூதா மனுஷர் வனாந்தரத்திலுள்ள சாமக்கூட்டண்டையிலே வந்து, அந்த ஏராளமான கூட்டமிருக்கும் திக்கை நோக்குகிறபோது, இதோ, அவர்கள் தரையிலே விழுந்துகிடக்கிற பிரேதங்களாகக் கண்டார்கள்; ஒருவரும் தப்பவில்லை.*

## ஆவிக்குரிய யுத்தம் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அடிப்படை விஷயங்கள்

Free Digitial Copy From ServeNow

*யோசபாத்தும் அவனுடைய ஜனங்களும் அவர்கள் உடைமைகளைக் கொள்ளையிட வந்தபோது, அவர்கள் கண்ட ஏராளமான பொருள்களும் பிரேதங்களிலிருந்து உரிந்துபோட்ட ஆடை ஆபரணங்களும், தாங்கள் எடுத்துக்கொண்டு போகக்கூடாதிருந்தது; மூன்று நாளாய்க் கொள்ளையிட்டார்கள்; அது அவ்வளவு மிகுதியாயிருந்தது. நாலாம் நாளில் பெராக்காவிலே கூடினார்கள்; அங்கே கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினார்கள்; ஆதலால் அவ்விடத்திற்கு இந்நாள்வரைக்கும் இருக்கிறபடி பெராக்கா என்னும் பேர் தரித்தார்கள். பின்பு கர்த்தர் அவர்களை அவர்கள் சத்துருக்கள்பேரில் களிகூரச் செய்தபடியால் யூதா மனுஷர் யாவரும் எருசலேம் ஜனங்களும், அவர்களுக்கு முன்னாலே யோசபாத்தும் மகிழ்ச்சியோடே எருசலேமுக்குத் திரும்பினார்கள். அவர்கள் தம்புருகளோடும் சுரமண்டலங்களோடும் பூரிகைகளோடும் எருசலேமிலிருக்கிற கர்த்தருடைய ஆலயத்திற்கு வந்தார்கள்.*

*கர்த்தர் இஸ்ரவேலின் சத்துருக்களோடு யுத்தம்பண்ணினார் என்று கேள்விப்பட்ட அந்தந்த தேசத்து ராஜ்யத்தார்மேல் தேவனால் உண்டான பயங்கரம் வந்தது. இவ்விதமாய் தேவன் சுற்றுப்புறத்தாரால் யுத்தமில்லாத இளைப்பாறுதலை அவனுக்குக் கட்டளையிட்டதினால், யோசபாத்தின் ராஜ்யபாரம் அமரிக்கையாயிருந்தது.*

### *யுத்தத்துக்கு முன் நாம் கர்த்தரைத் துதிக்க வேண்டும்*

பெரும்பாலான மக்கள் வெற்றி பெற்ற பிறகு தேவனைத் துதிக்கிறார்கள், ஆனால் ஆவிக்குரிய வீரர்கள் தேவன் தலையிடுவதற்கான ஆதாரங்களைக் காண்பதற்கு முன்பே தேவனைத் துதிப்பதன் வல்லமையைக் கற்றுக்கொள்கிறார்கள். கடினமான சூழ்நிலைகளில் நாம் தேவனைத் துதித்துப் பேசும்போது, அந்தச் சூழ்நிலைகளில் அவருடைய வல்லமையையும் வெற்றியையும் நாம் உறுதிப்படுத்துகிறோம்.

18-19 ஆகிய வசனங்களில் இதைக் கவனியுங்கள், *யோசபாத் தேவனுடைய தீர்க்கதரிசியின் செய்தியைக் கேட்டவுடனே, கர்த்தரை துதிக்கத் தொடங்கினான்.*

Free Digital Copy From ServeNow

### *யுத்தத்தின் போது நாம் கர்த்தரைத் துதிக்க வேண்டும்*

வசனங்கள் 21-22-ல், யுத்தத்தின்போது, யோசபாத் படைக்கு முன்னால் நடந்து செல்ல பாடகர்களை நியமித்ததையும், கர்த்தரைப் பாடி, அவருடைய பரிசுத்த மகிமையின் நிமித்தம் அவரைத் துதித்ததையும் நாம் காண்கிறோம். *கர்த்தரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றும் உள்ளதென்று,* பாடகர் குழு பாடுவதைக் கேட்டதும் அவர்களின் எதிரிகள் என்ன நினைத்தார்கள் என்பதை நீங்கள் கற்பனை செய்யலாம்! (2 நாளாகமம் 20:21)

அவர்கள் பாடி கர்த்தரைத் துதிக்க ஆரம்பித்தவுடன், அவர் அவர்களுடைய எதிரிகள் தங்களுக்குள் சண்டையிடத் தொடங்கும்படி செய்தார். யுத்தத்தின் போது, விசுவாசிகள் தேவனைத் துதிக்கையில், அவர்கள் அனுபவிக்கும் வெற்றி அதுதான்.

### *வெற்றி பெற்ற பிறகு நாம் கர்த்தரைத் துதிக்க வேண்டும்.*

26-28 வசனங்களில், இஸ்ரவேலர் வெற்றி பெற்ற பிறகு, அவர்கள் ஆசீர்வாதங்களின் பள்ளத்தாக்கில் கர்த்தரைத் துதித்து நன்றி செலுத்த கூடினர் என்பதைப் பார்க்கிறோம். பின்னர் அவர்கள் அனைவரும் வீணைகள், யாழ்கள் மற்றும் எக்காளங்களின் இசையுடன் எருசலேமுக்குத் திரும்பினர், கர்த்தர் தங்களுக்கு வெற்றியைக் கொடுத்ததில் மிகுந்த மகிழ்ச்சியடைந்தனர்.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், யுத்தத்துக்கு முன்பும் யுத்தத்தின் போதும் தொடங்கிய துதி, யுத்தம் முடிந்த பிறகும் தொடர்ந்தது.

### *விசுவாசம்*

நமது போராட்டத்தில் விசுவாசம் ஒரு வலிமையான ஆயுதமாகும். பவுல் தீமோத்தேயுவுக்கு இதை அறிவுறுத்துகிறார்: *விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்தியஜீவனைப் பற்றிக்கொள்; அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்; அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கைபண்ணினவனுமாயிருக்கிறாய்* (1 தீமோத்தேயு 6:12 TAOVBSI). நமக்கு வெற்றியைத் தருவது தேவனுடைய சித்தம்

Free Digitial Copy From Servant Now

என்பதை அறிந்து, விசுவாசத்தின் உறுதியான அடித்தளத்திலிருந்து நாம் தைரியமாகவும், உறுதியுடனும், நம்பிக்கையுடனும் யுத்தத்துக்குச் செல்ல வேண்டும். விசுவாசமுள்ள ஜெபத்திற்கு வல்லமை உண்டு.

விசுவாசிகளான நாம் பிசாசை வெல்ல, நம் சொந்த பலத்தில் அவனை எதிர்த்துப் போராட வேண்டியதில்லை. வெற்றி பெற்ற நிலையிலிருந்து தேவனுடைய வார்த்தையின் மீது விசுவாசம் வைத்தே நாம் பிசாசின் வல்லமைகளுடன் போராடுகிறோம். நமக்கு இருக்கிற ஒரே போராட்டம் விசுவாசப் போராட்டமாகும்.

வேதாகமம் கூறுகிறது, *ஆகையால், அந்தத் திருஷ்டாந்தத்தின்படி, ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்துபோகாதபடிக்கு, நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம்.* (எபிரெயர் 4:11)

விசுவாசம் எனும் தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்க நாம் பாடுபடுகிறோம். சில விசுவாசிகள் சத்துருவைத் தோற்கடிக்க முயற்சி செய்கிறார்கள். அவர்கள் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து, விசுவாசமாகிய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்க வேண்டும். நீங்கள் ஒரு விசுவாசி என்றால், நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்கள், இப்போது சாத்தானிய வல்லமைகள் மீது உங்களுக்கு அதிகாரமும் வெற்றியும் உண்டு. சாத்தானின் மீது அதிகாரம் பெற நீங்கள் பாடுபட வேண்டியதில்லை, ஏனென்றால் இயேசு அந்தத் துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் தோற்கடித்ததன் மூலம் உங்கள் மீட்பில் அதை உங்களுக்குக் கொடுத்துவிட்டார்.

### உபவாசம்

உபவாசம் என்பது யுத்தத்தின் மிக முக்கியமான அம்சமாகும். இயேசு பிசாசை எதிர்கொள்வதற்கு முன், நாற்பது நாள் இரவும் பகலும் உபவாசம் இருந்தபோது, அதை வெளிப்படுத்திக்காட்டினார். *இயேசு பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவராய் யோர்தானை விட்டுத் திரும்பி, ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டு, நாற்பதுநாள் பிசாசினால் சோதிக்கப்பட்டார். அந்த நாட்களில் அவர் ஒன்றும் புசியாதிருந்தார்;*

## ஆவிக்குரிய யுத்தம் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அடிப்படை விஷயங்கள்

Free Digital Copy From ServeNow

*அந்த நாட்கள் முடிந்தபின்பு அவருக்குப் பசியுண்டாயிற்று.* (லூக்கா 4:1-2 TAOVBSI)

2 நாளாகமம் 20:1-30-ஐ மீண்டும் வாசித்துப் பாருங்கள் (பக்கங்கள் 23-26 ஐப் பார்க்கவும்). யோசபாத் ராஜா தனது எதிரிகள் ஏராளமானோர் யுத்தத்துக்கு வருகிறார்கள் என்பதைக் கேள்விப்பட்டான். உண்மையைச் சொல்ல வேண்டுமானால், அவன் பயந்து, திகிலடைந்தான். அந்தச் சூழ்நிலையில் அவன் என்ன செய்தான்?

- அவன் கர்த்தரைத் தேடினான்
- அவன் யூதேயா தேசம் முழுவதும் உபவாசத்தைப் பிரகடனப்படுத்தினான்.

தனது நெருக்கத்தில், அவன் மற்ற மனிதர்களிடம் திரும்பிச் செல்லவில்லை, மாறாக உபவாசத்தின் (மற்றும் ஜெபம்) மூலம் தேவனைத் தேடுவதற்குத் தன்னை ஆயத்தப்படுத்திக்கொண்டான்.

உபவாசமிருந்து ஜெபிக்கிற விசுவாசி தைரியமாக நின்று சத்துருவை எதிர்கொள்ள வேண்டும். இருப்பினும், யுத்தம் தன்னுடையது அல்ல, கர்த்தருடையது என்ற நிச்சயத்துடன் அவன் சத்துருவை எதிர்கொள்கிறான். நாம் உபவாசம் இருக்கும்போது, யுத்தம் முடிந்துவிட்டது என்று நாம் தவறாக நினைக்கக்கூடாது. அப்படி முடியும் என்பது அவசியம் இல்லை. உபவாசம் இருக்கும் ராஜாவிடம் கர்த்தர் கூறினார்: *நாளைக்கு நீங்கள் அவர்களுக்கு விரோதமாய்ப் போங்கள்; இதோ, அவர்கள் சிஸ் என்னும் மேட்டுவழியாய் வருகிறார்கள்; நீங்கள் அவர்களை யெருவேல் வனாந்தரத்திற்கு எதிரான பள்ளத்தாக்கின் கடையாந்தரத்திலே கண்டு சந்திப்பீர்கள். இந்த யுத்தத்தைப் பண்ணுகிறவர்கள் நீங்கள் அல்ல; யூதா மனுஷரே, எருசலேம் ஜனங்களே, நீங்கள் தரித்து நின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள்; நாளைக்கு அவர்களுக்கு எதிராகப் புறப்படுங்கள்; கர்த்தர் உங்களோடே இருக்கிறார் என்றான்!* (2 நாளாகமம் 20:16-17)

வெற்றி நிச்சயம் என்றாலும், சத்துருவை இன்னும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. தேவ ஜனங்கள் சண்டையிடக்கூடாது, மாறாக அமர்ந்திருந்து, தங்கள் சார்பாக கர்த்தர் யுத்தம் செய்து வெற்றி பெறுவதைக் காண உறுதியாக இருக்க வேண்டும்.

Free Digital Copy From Serve Now

# ஆவிக்குரிய யுத்தம் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அடிப்படை விஷயங்கள்

## நமது சாட்சியின் வல்லமை

வெளிப்படுத்தின விசேஷம் 12:11 கூறுகிறது, *ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்.*

ஒவ்வொரு விசுவாசிக்கும் ஒரு சாட்சி இருக்கிறது. நம்முடைய சாட்சிகளால் நாம் யுத்தத்தில் பிசாசை ஜெயிக்கிறோம். கிறிஸ்து உங்களுக்காக என்ன செய்தார் என்பதை உங்களுக்கு நினைவூட்டிக் கொண்டு மற்றவர்களிடம் சொல்லுங்கள். இது உங்கள் விசுவாசத்தை வலுப்படுத்தும் மற்றும் உங்கள் யுத்தத்தின்போது உங்களுக்கு உதவும். கர்த்தர் உங்களுக்காகச் செய்ததைப் பற்றி சத்தமாகப் பேசுவது, உங்கள் போராட்டங்களுக்கு மத்தியில் உங்களுக்கு உதவ வல்லமையுடைய ஆயுதமாகும்.

## பரிசுத்த ஆவியானவர்

கிறிஸ்துவின் சிந்தையை நாம் தரித்துக்கொள்வதன் மூலம் ஆவிக்குரிய யுத்தத்தை நடத்த பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவுகிறார். பரிசுத்த ஆவியானவர் நம்மில் இல்லையென்றால், நாம் ஆவிக்குரிய யுத்தத்தை நடத்துவதற்குப் பயனற்றவர்களாகிவிடுவோம். பரிசுத்த ஆவியானவர் பாவத்தின் மீது வல்லமையையும், பிசாசின் தந்திரமான கிரியைகளை எதிர்க்கும் வல்லமையையும் நமக்குத் தருகிறார். நீங்கள் பாவத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும்போது, பரிசுத்த ஆவியானவர் உங்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க உங்களால் அவருக்கு இடங்கொடுக்க முடியாது. பரிசுத்த ஆவியானவர் பாவத்தை உடனடியாகக் கண்டறியத்தக்க உணர்திறன் கொண்டவர்.

நமக்குள் இருக்கிற தேவ ஆவியானவருக்கு நம்மை அர்ப்பணிப்பதன் மூலம், நாம் எதிர்கொள்ளும் ஒவ்வொரு யுத்தத்திலும் ஆவியானவரால் முழுமையாக பெலனடைந்து வழிநடத்தப்பட முடியும். *பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து* ... என்று அப்போஸ்தலர் 1:8 கூறுகிறது. இந்த வல்லமை எல்லா யுத்தங்களையும் வெல்ல நமக்கு உதவுகிறது.

பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு விசுவாசிக்கும் யுத்தங்களில் வெற்றி பெறுவதற்கான மூலோபாய ஞானத்தைக் கொடுக்கிறார். நீங்கள் தொழில்துறை அல்லது கல்வித் தகுதிகளைக்

Free Digital Copy From Serve Now

கொண்டிருப்பதால் யுத்தங்களில் வெற்றி பெறுவதில்லை, மாறாக பரிசுத்த ஆவியானவர் மூலமாகவே வெற்றி பெறுகிறீர்கள்.

*அமலேக்கியர் வந்து ரெவிதீமிலே இஸ்ரவேலரோடே யுத்தம்பண்ணினார்கள். அப்பொழுது மோசே யோசுவாவை நோக்கி: நீ நமக்காக மனிதரைத் தெரிந்துகொண்டு, புறப்பட்டு, அமலேக்கோடே யுத்தம்பண்ணு; நாளைக்கு நான் மலையுச்சியில் தேவனுடைய கோலை என் கையில் பிடித்துக்கொண்டு நிற்பேன் என்றான்.*

*யோசுவா தனக்கு மோசே சொன்னபடியே செய்து, அமலேக்கோடே யுத்தம்பண்ணினான். மோசேயும் ஆரோனும் ஊர் என்பவனும் மலையுச்சியில் ஏறினார்கள். மோசே தன் கையை ஏறெடுத்திருக்கையில், இஸ்ரவேலர் மேற்கொண்டார்கள்; அவன் தன் கையைத் தாழவிடுகையில், அமலேக்கு மேற்கொண்டான். மோசேயின் கைகள் அசந்துபோயிற்று, அப்பொழுது அவர்கள் ஒரு கல்லைக் கொண்டுவந்து அவன் கீழே வைத்தார்கள்; அதின்மேல் உட்கார்ந்தான்; ஆரோனும் ஊரும் ஒருவன் ஒரு பக்கத்திலும் ஒருவன் மறு பக்கத்திலும் இருந்து, அவன் கைகளைத் தாங்கினார்கள்; இவ்விதமாய் அவன் கைகள் சூரியன் அஸ்தமிக்கும்வரைக்கும் ஒரே நிலையாயிருந்தது. யோசுவா அமலேக்கையும் அவன் ஜனங்களையும் பட்டயக்கருக்கினாலே முறிய அடித்தான்.*

*பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி: இதை நினைவுகூரும்பொருட்டு, நீ ஒரு புஸ்தகத்தில் எழுதி, யோசுவாவின் செவி கேட்கும்படி வாசி. அமலேக்கை வானத்தின் கீழெங்கும் இராதபடிக்கு நாசம் பண்ணுவேன் என்றார். மோசே ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதற்கு யேகோவாநிசி என்று பேரிட்டான்* (யாத்திராகமம் 17:8-15).

**முடிவுரை**

கடைசியாக, நாம் எந்த யுத்தத்தைக் குறித்தும் பயப்படத் தேவையில்லை, ஏனென்றால் கிறிஸ்து இயேசுவின் மூலம் நாம் ஏற்கனவே வெற்றி பெற்றுள்ளோம். ஆவிக்குரிய யுத்தத்தின் அனைத்து ஆயுதங்களையும் *எல்லா நேரங்களிலும்* முழுமையாகத் தரித்திருப்பது நமது நிலைப்பாடாக இருக்க வேண்டும். வெற்றி நம்முடையது என்பதை அறிந்து, பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட வேண்டும்.

## ஆவிக்குரிய யுத்தம் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அடிப்படை விஷயங்கள்

Free Digitial Copy From ServeNow

**பாடத்தை கற்றுக்கொள்ளவும் பிரதிபலிக்கவும் சில கேள்விகள்**

1. ஆவிக்குரிய யுத்தத்தில் நீங்கள் இதற்கு முன் அறியாத எவைகளை இப்பொழுது கற்றுக்கொண்டீர்கள்?

2. ஆவிக்குரிய யுத்தத்தைப் பற்றி வேதாகமம் என்ன கற்றுக் கொடுக்கிறது?

3. தேவன் அளிக்கும் கவசத்தின் பல்வேறு பகுதிகளிக் பெயர்களைச் சொல்வீர்களா?

4. நாம் பயன்படுத்தக்கூடிய வல்லமையான மற்ற ஆயுதங்கள் என்ன?

5. நீங்கள் சந்தித்த ஆவிக்குரிய யுத்தத்தில் இந்த ஆவிக்குரிய ஆயுதங்களை பயன்படுத்திய உங்கள் வாழ்வில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது?

6. நீங்கள் தாக்கப்படும்போது ஜெபமும் இயேசுவின் இரத்தமும் துதியும் எவ்வளவு முக்கியமானவைகளாக உள்ளன?

7. கொலோசேயர் 2 : 15 மற்றும் எபேசியர் 1: 21-23 ல் இருந்து நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்கள்?